# பக்தி இலக்கியத்தில் வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

*அ. பிரான்சிஸ்*
உதவிப் பேராசிரியர்
புனித ஜோசப்கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெய்க்காலிப்பட்டி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958637

## முன்னுரை

மனித வாழ்க்கையின் ஓர் இன்றியமையாக்கூறு சமயமாகும் சமயம் என்பது சமுதாய வாழ்க்கைக்கு அடிப்படையானதொரு நெறியாக அமைந்து வளர்ந்து வருகின்றது. தனி மனிதனைச் சமயம் வளர்த்துச் சமுதாய வாழ்வுடையவனாக்கி அன்பின் ஆற்றலும் அருள் ஒழுக்கமும் உடையவனாக அவனை மாற்றுகிறது என்ற நம்பிக்கை இருந்து வருகின்றது இதற்குத் துணை செய்வது வழிபாடாகும். சமய மறுப்புக் கோட்பாடுகள் உலகில் இருப்பினும் அது சிறுபான்மையே என்பது எண்ணத்தக்கதாகும்.

## வழிபாடு சொல் - பொருள் விளக்கம்

வழிபாடு என்னுஞ் சொல் வழிபடு என்ற ஏவற்பகுதியினின்றும் பிறந்தது வழிபடு என்பதில் அமைந்த படு என்னும் துணைவினை பாடு என முதனிலை நீண்டமைந்து வழிபாடு என ஆயிற்று.

**வழி : இறைப்பேற்றுக்குரிய வழி**

**பாடு : இறைநெறியிற் படுதல் பொருந்துதல்**

எனவே இறைப்பேற்றுக்குரிய வழியை அடைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் செயல்முறைகளே வழிபாடு எனப்பெறும்.

வழிபாடு என்பது முன்னோர் காட்டிய வழிக்கண் படுதல் என்ற பொருண்மையது வழிபாடு என்ற சொல் இன்று தொழுதல் வணங்குதல் என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகின்றது.

**“கோடன் மரபே கூறுங் காலைப்**
**பொழுதொடு சென்று வழிபடல் முனியான்**
**குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்து”**

என நன்னூல் மாணாக்கன் ஆசிரியரைத் தொழுது அவன் நெறிநிற்றவைக் கூறும்.

அகராதி கலைக்களஞ்சியம் மற்றும் அறிஞர் தரும் விளக்கம் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி “வழிபாடு” என்ற சொல்லுக்கு “வழியிற் செல்லுகை” (Proceeding on the way) பின்பற்றுகை (following) வணக்கம் (Reverence, adoration) எனப பல பொருள்களைத் தருகிறது. செந்தமிழ் அகராதி வணக்கம் என்ற பொருளைத் தருகிறது. வணக்கம் கோட்பாடு என இரு பொருள்களைத் தருகின்றது.

தற்காலத் தமிழ் அகராதி கழகத் தமிழ் அகராதி வணக்கம். வழியிற் செல்லுகை பின்பற்றுகை பூசனை வழக்கம் சமயக் கோட்பாடு என்ற பொருள்களை நவில்கின்றது

## சமய வழிபாடு

சமயத்தில் வழிபாடு என்ற சொல் கௌரவம் கண்ணியம் வணக்கம் மதிப்பு என்ற பொருள்களைப் பெற்று இலங்குகின்றது என்றும் கடவுளையோ உயிர் உள்ளவற்றையோ உயிர் இல்லாத வற்றையோ வழிபாட்டுச் சொற்களைக் கொண்டு வழிபடுவதை வழிபாடு என்றும் கருதுகின்றனர். வழிபாடு என்பது அடிப்படையாக ஒரு விருப்பத்தின் வெளிப்பாடே என்பர். ஆன்மீகக் கூட்டு வழிபாட்டை இன்று இச்சொல் உணர்த்தினாலும் ஒரு மதிப்புமிக்க வேண்டுதலையே வெளிப்படுத்துவதாகச் சமயமும் அறமும் பற்றிய கலைக்களஞ்சியம் கூறுகிறது. மேலும் உண்மை பேசுவதே வழிபாட்டின் உயர் நிலை என்றும் பேரின்பத்தைக் கொண்டு வருவது வழிபாடு என்றும் இறைவனை நோக்கி உறுதியான பயணம் மேற்கொள்வதே ஒருமையுணர்வுடன் செய்யப்படுகின்ற வழிபாடு என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆன்மாக்கள் வழிபாட்டின் மூலமே இறைவனிடம் இலயிக்கின்றன. மன ஒருமைப் பாடே வழிபாட்டினைச் செம்மையுறச் செய்கின்றது. வழிபாட்டில் மனத்தின் இனிய ஒத்துழைப் பில்லாமல் உதடுகள் வெற்றி பெற முடியாது. என்று ஹெர்ரிக் கூறும்போதும் வழிபாடு கடவுளிடம் அனுப்பபடும் தூதர் என்று பிரான்ஸிஸ் ரௌஸ் கூறும் போது வழிபாடு என்பது மனிதனுடைய மனத்திற்கும் கடவுளுடைய அரியாசனத்திற்கும் போடப்பட்ட பாலம் என்று மற்றொரு அறிஞர் கூறும்போதும் மனத்திற்கும் வழிபாட்டிற்கும் உள்ள நெருங்கிய பிணைப் பினை இன்னும் நன்கு உணர முடிகின்றது எனவே வழிபாடு என்பது மனத்துடன் தொடர்புபட்ட ஒன்றாகவே அமைந்து விடுகிறது.

## இலக்கண இலக்கியம் தரும் விளக்கம்

இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் வழிபாடு மறுத்தல், வழிபடு தெய்வம், வழிபடு கிழமை என்றவாறாகச் சொற்கள் பயின்று வருகின்றன. பூசனை என்ற பொருளினைத் தருகின்றது பிங்கலநிகண்டு மேலும் வழிபடல் சூழ்ந்திசின் அவருடைய நாட்டே எனவரும் குறுந்தொகைப் பாட்டில் வழிபடல் என்பதற்குச் சொல்லுதல் எனப்பொருள் கொள்கிறார் உ.வே.சாமிநாதய்யர் காஞ்சிப்புராணத்தில் வழிப்படுத்தல் என்பதற்கு சீர்திருத்தம் இரு மொழியும் வழிப்படுததார் என்றும் திருவாய் மொழி நூற்றந்தாதியில் இச்சொல் (அமரர் கோன் வழிபட்டால்) நேர்சொல்லுதல் என்றும் திருக்கோவையாரில் மதிநுதலியை வழிபடுத்து என்ற இடத்தில் பயணமாதல் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. நாலடியாரில் வழிபாடு என்பதற்கு பின்பற்றுதல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. வந்தனை செய்து வழிபடு தலைக்கோல் கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள் என்று சிலப்பதிகாரத்திலும் வழிபடுவோரை வல்லறிதியே என்று புறநானூற்றுப் பாடலிலும் வழிபடுதல் என்பது வணங்குதல் என்ற பொருளையே தருகின்றது வழிபாடு என்பது வணக்கம் பூசனை பின்பற்றுதல் எனப் பல பொருள்கள் கொண்டிருப்பினும் இறைவனையோ அல்லது இறைவனோடு தொடர்பு கொண்ட உயிர் உள்ளவற்றையோ உயிர் இல்லதவற்றையோ வாயால் மனத்தால் வழிபடுவதே வழிபாடு என வழிபாட்டிற்கு ஒரு வரையறையை இவ்விளக்கங்களால் பெற முடிகின்றது.

## வழிபாட்டின் தோற்றத்திற்கான காரணங்கள்

மனித இனம் தோன்றிய காலம் முதல் வழிபாடு இருந்து வருகிறது மனிதனின் பிறப்பு இறப்பு உணவு ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தவற்காகத் தோன்றியது வழிபாடு ஆகும். வழிபாட்டின் தோற்றத்திற்கான காரணங்களாகப் பல கருத்துக்களை அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். சிக்மண்டு பிராய்டு வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்ச்சியிலிருந்தும் குற்ற உணர்ச்சியிலிருந்தும் உண்டாகி யிருப்பதாகக் கருதுகிறார் இக்கருத்தின் அடிப்படையிலேயே

உலகளாவிய கடவுள் நம்பிக்கை வழிபாடு பூசை ஆகியவற்றைப் பொறுத்த அளவில் ஆசை அச்ச அடிப்படையிலும் அன்பு அடிப்படையிலும் தோன்றித் தழைத்திருக்க வேண்டும் என்கிறார் க.ப.அறவாணன் பண்டைத்தமிழர் வாழ்வினையும் அவர்தம் வழிபாட்டினையும் கூறும்போது "புராண மக்கட் கூட்டத்தினர் கருவளத்தையும் பயிர் வளத்தையும் ஒருங்கே பெறுவதற்காக மந்திரங்களை கையாண்டனர். அதன் தருக்கநெறி முடிவாக வழிபாடு தோன்றியிருக்கலாம்" எனக் கருது வதாகக் கூறுகிறார் க.கைலாசபதி.

எனவே வழிபாடு மனிதனிடத்தில் அச்சத்தின் அடிப்படையிலும் அன்பின் அடிப்படையிலும் தோன்றியது எனலாம். மனிதன் வழிபாட்டை விட்டாலும் வழிபாடு அவனை விடாது வாழ்வு வழிபாட்டைப் பின்னி நிற்கும் என்ற திரு.வி.கவின் கருத்தினை உறுதிபடுத்துவது போல் மனிதன் தோன்றிய பொழுதே வழிபாடும் தோன்றி விட்டதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

இவர்தம் கருத்துக்களிலிருந்து மனிதனிடத்துத் தோன்றிய அச்ச உணர்ச்சியும், அன்பு உணர்ச்சியுமே வழிபாடு தோன்றுவதற்கு மூலமாய் அமைந்திருந்தன என்ற உண்மை பெறப்படுகின்றது.

எனவே மனிதன் முதலில் இயற்கை தம்மைத் துன்புறுத்துமோ என்ற அச்சத்தில் பாதுகாப்பு கருதி வழிபடத் தொடங்கினான். வழிபட்டால் அவை தமக்குத் தீங்கு விளைவியா நன்மையே செய்யும் என்ற நம்பிக்கையில் பயன்கருதி அன்பு கொண்டு வணங்க முற்பட்டான் இதனையே

***"வழிபாடு மனிதனுடைய மனத்தில்***
***தன்னைவிடச் சக்தி***
***வாய்ந்த தன்னுடைய நலனை நடத்திச்***
***செல்லக்***
***கூடிய இயற்கை சக்தியின் மீது ஏற்பட்ட பயம்***
***கலந்த மரியாதையினால் தோன்றிய***
***அவனுடைய***
***உள்ளுணர்வுகளின் மூலம் வெளிப்படுகின்றது"***
***(சமய கலைக் களஞ்சியம்.)***

என நீதிகள் மற்றும் சமயகலைக்களஞ்சியங்கள் விளக்குகின்றது.

மரங்களின் உயிர்ப்பாற்றல் கண்முன் தழைத்துப் பயன்விளைவித்துப் பெருகும் நிலை பண்டை மக்களின் உள்ளத்தில் ஒரு மறுபிறப்பு அடிப்படையிலான கருதுகோளை மனத்தில் ஊன்றியிருக்கிறது மரங்கள் இனப்பெருக்க குறியீடாக மொகஞ்சதரோவில் எண்ணப் பட்டிருக்கின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் கடவுண்மரம் என்ற சொல்லாட்சி பயன் பெற்றுள்ளது.

மரங்களே தெய்வமென்றும் அவைகளில் ஏதோ அறியவியலாத இனந்தெரியாத ஒரு சக்தி தெய்வம் ஒன்று உண்டு என்றும் வாழ்வியல் வளத்துக்கு அம்மரங்களில் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும் அச்சக்தியே (தெய்வம்) வழிகாட்டும் என்றும் நம்பிக்கை கொண்டு மக்கள் மரங்களை வழிபட்ட மரவழிபாடே மனித வரலாற்றில் முதன் முதல் தோன்றிய வழிபாடாகும். பலவகைப்பட்ட மரங்கைள் தெய்வமென நம்பி வழிபட்ட மக்கள் தம்முடைய வாழ்வில் இன்பமும் துன்பமும் விரவிவரக் கண்டு அத்துன்பத்துக்குரிய காரணங்களைக் கண்டறிய முற்பட்டனர். இதன் பயனாக அத் தெய்வீக மரங்களில் ஆவியும் பேயும் குடிகொண்டிருப்பதாக நம்பினர்.

***மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்***
***கொயோர்த் தெறூ உமென்ப யாவலும்***
***கொடிய ரல்லரெங் குனுசுறுகெழு நாடர்***
***பசைஇப் பசந்தன்று நுதலே***
***ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே***

எனத் தானுறு நோய்க்குத் தலைவர் காரணமெனக் கருதி மன்றத்தின் கண்ணுள்ள மரத்தில் உறையும் கடவுள் அவனை ஒறுத்து விடக் கூடாதெனத் தலைமகள் எண்ணுவதாகக் கபிலர் கூறுவர் "நல்லரை மரா அத்த கடவுள்" என மலைபடுகடாம் கூறும் மராமரத்திலுள்ள கடவுள் குறித்துக் கலித்தொகை மொழியும் அவைகளையும் சேர்த்து வணங்குதலே தமது துன்பத்தைத் துடைக்கும் வழி என்றுணர்ந்து அச்சத்தின் காரணமாக அவற்றையும் தெய்வமாக வழிபடலாயினர்.

பண்டைத் தமிழர் தாம் வழிபடும் இயற்கைப் பொருட்களெல்லாம் தோன்றாத் துணையாயிருந்து தெய்வங் காக்கும் என்னும் அசைவில்லாத நம்பிக்கையுடன் கூடிய உறுதிபாட்டோடு இருந்தனர். இவ்வுறுதியே காலப்போக்கில் வேறு வேறு பொருள்களின் மூலம் கண்ணிற்கு புலனாகாமல் மனத்தால் மட்டுமே உணர்ந்த பற்பல தெய்வங்களும் வழிபாடுகளும் தோன்றி வளர்வதற்கு காரணமானது.

**வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட**
**ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே**

என இவ்வழிபாட்டு நுட்பம் நக்கீரரால் உணர்த்த பெறும் இதனைப் படையில் பல்வேறுவிதமான வழிபாட்டினைத் தோற்றுவித்தன வழிபாட்டின் இந்தத் தோற்றமும் வளர்ச்சியும் காலமாற்றத் திற்கேற்ப மனிதனிடத்துத் தோன்றிய முன்னேற்றத்தின் ஒரு சீரான வளர்ச்சியாகும்.

## வழிபாட்டின் வகைகள்

வழிபாட்டின் படிப்படியான வளர்ச்சி நிலையிலிருந்து அவ்வழிபாட்டில் வணங்கப் படுதற்குரியதாக இடம்பெறும் கருப் பொருளைக் கொண்டே வழிபாட்டைப் பல வகைகளாகப் பிரிக்கலாம் இயற்கை வழிபாடு, மர வழிபாடு, விலங்கு வழிபாடு, நடுகல் வழிபாடு, பெண் தெய்வ வழிபாடு, முருகன் வழிபாடு, சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, ஊர்தி வழிபாடு, அடியார் வழிபாடு என வழிபாடு பலவகைப்படும். அவற்றுள் சில கீழே காணலாம்.

## இயற்கை வழிபாடு

இயற்கைவழிபாடே உலகின் தொன்மையான வழிபாடாகக் கருதப்படுகிறது. உலகில் தெய்வக் கொள்கை தோன்றுவதற்குக் காரணமாய் இருந்தவை இயற்கைப் பொருள்களே எனலாம். இயற்கையில் இடம்பெறும் ஞாயிறு திங்கள் நெருப்பு இடி மின்னல் போன்ற இயற்கைக் கூறுகளைச் சார்ந்தமையும் வழிபாட்டினை இயற்கை வழிபாடு எனலாம் கருப்பொருளில் தெய்வத்தை ஒன்றாக எண்ணும் மரபைத் தொல்காப்பியம் உணர்த்துகின்றது நிலம் பொழுது என்னும் இயற்கைக் கூறுகளை முதற்பொருளாக எண்ணும் தொல்காப்பியம்.

**“மாயோன் மேய காடுறை யுலகமும்**
**சேயோன் மேய மைவரை யுலகமும்**
**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**
**வருணன் மேய பெருமண லுலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”**

என்று கூறுகிறது.

தமிழ் நூல்களாகக் கிடைத்தனவற்றுள் முதல் நூலான தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

**“கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே”**

என்னும் நூற்பா தமிழ் மக்கள் முதன் முதலில் இயற்கைக் கடவுளாகச் சூரிய சந்திரரை வழிபட்ட செய்தியைக் கூறுகின்றது

பண்டைத் தமிழ் நூல்களில் ஞாயிறு பற்றிய குறிப்புக்கள் வந்துள்ளன. பண்டைத்தமிழர் காற்றுத்தெய்வத்தை வணங்கினர் என்பதனை

**“முளிமுதன் மூழ்கிய வெம்மை தீர்ந்துறுகென**
**வளிதருஞ் செல்வனை வாழ்ந்த வுமியைவ**
**தோ”**

என்னும் கலித்தொகை அடிகளின் வாயிலாக அறிகிறோம் கதிரவனுக்குக் காவிரிபூம்பட்டினத்தில் கோயிலிருந்தது என்ற செய்தி இந்திவிழவூரெடுத்த காதையால் அறியப்பெறும்.

## மர வழிபாடு

இயற்கைப் பொருட்களையெல்லாம் தெய்வமாக எண்ணி வழிபட்ட மக்கள்தமக்குப் புகலிடந் தந்த மரங்களை வழிபடவில்லை யென்றால் சீற்றங் கொள்ளுமோ என்ற அச்சத்துடன் காய் கனிகளைக் கொடுத்துத் தங்களுக்கு அடைக் கலமும் தந்ததால் நன்றி உணர்ச்சியுடன் கூடிய அன்புடனும் அவற்றைத் தெய்வமாக வணங்கினர் இங்ஙனம் மரவழிபாடு தோன்றி வளர்ந்தது பூ வழிபாட்டின் தாயகம் திராவிடமாக இருப்பதால் அதன் மூலமான மரவழிபாட்டிற்குத் தாயகம் திராவிடர் என்பர் க.ப.அறவாணன்.

மரங்களை வழிபடும் வழக்கம் ஒருகாலத்தில் கிரீஸ் பிரான்ஸ் போலந்து முதலிய நாடுகளில் நிலவியிலிருந்தது. ஆப்பிரிக்காவிலும் அமெரிக்காவிலும் பழங்குடி மக்களிடையே மரத்தை வழிபடும் நிலத்தை இன்றும் நிலவுகிறது. ஆசியக்க ண்டததிலுள்ள மக்கள் சில மரங்களுக்கு இயற்கையிலேயே இறை ஆற்றல் உண்டென நம்புகின்றனர். வேதகால் முதல் குசை தருப்பை என்னும் புற்களும் சிறப்புப்பெறத் தொடங்கின என்று கூறுவர். சிந்துவெளி மக்கள் மரங்களையும் அவற்றில் உறையும் தெய்வங்களையும் வழிபட்டு வந்தனர் என்பதற்கு மொகஞ்சொதரோவிலும் அரப்பாவிலும் கிடைத்துள்ள முத்திரைகளும் வில்லைகளும் சான்றாக அமைகின்றன. மரங்களை இயற்கை நிலையிலேயே வழிபட்ட முறையை இதில் காணமுடிகிறது.

## விலங்கு வழிபாடு

விலங்கு வழிபாட்டில் நாக வழிபாடே முதன்மையானதாகும் இயற்கை வழிபாடு தோன்றி வழக்கில் இருந்த காலத்தின் தான் பாம்பு வழிபாடும் தோன்றி இருத்தல் வேண்டும் ஏனென்றால் மரங்களில் தெய்வம் உறைவதாக எண்ணி மரங்களை வழிபட்ட மக்கள் அம்மரங்களிலும் அவற்றைச் சுற்றிலுமிருந்த பாம்புகளைக் கண்டு அச்சம் கொண்டு அவற்றையும் தெய்வங்களாக வழிபட்டனர். ஆக அச்சமும் அன்புமே நாகவழிபாட்டின் அடிப்படைக் காரணங்களாகும். பண்டைக் காலத்தில் பாம்பு வழிபாடு முன்னோர் வழிபாட்டுடன் இணைக்கபட்டிருத்தல் வேண்டும் அதனால் தான் பாம்பு வழிபாடு ஏறத்தாழ தனிவழிபாடாக வளர்ந்துள்ளது எனலாம். ஆப்பிரிக்கா முழுவதிலும் பாம்பினை முன்னோர் வடிவு என்று கருதும் கருத்துநிலை உள்ளது. கிரேக்கமக்களும் பாம்பை தம் முன்னோராகக் கருதி வழிபட்டனர். இறந்த வீரர்கள் பாம்பு உருவில் வருவர் என்பது கிரேக்கர்களின் நம்பிக்கையாகும்

## நடுகல் வழிபாடு

இயற்கை வழிபாட்டோடு மக்கள் இறந்து போன நம் முன்னோர்களையும் தாய் தந்தையரையும் வழிபடத் தொடங்கினர். அவர்களை அடக்கஞ் செய்த இடங்களில் கல்லை நாட்டி அக்கல்லின்கண் முன்னோர்கள் இருந்து தங்கள் வணக்கத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுத் தங்களுக்கு நலம் தருவதாக நம்பி வழிபட்டனர். வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த முன்னோர்களுக்குத் தொன்மைக் காலத்திலேயே தெய்வ வணக்கம் இருந்தது என்பதற்குக்

**காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்**

என்று தொல்காப்பியம் சான்று பகர்கின்றது.

## முடிவுரை

இறைவன் இயற்கைப் படைப்பில் தோன்றி மரங்களில் வதிந்து விலங்குகளில் எழுந்து சிறு தெய்வ பெருந்தெய்வமாய் உலகுக்குத் தன்னை உணர்த்தி இன்று அடியார் உருவமாய் உலகில் நிலவி வருகின்றான் அடியார்களில் ஒருவனாகக் கருதப்படும் அனுமன் தெய்வ நிலைக்கு ஏற்றப்பட்டமையை இக்கட்டுரையின் வழி ஆராய முடிகின்றது.